செ.வெ.எண்-40 நாள்-21.02.2018

**அரியலூர் மாவட்டத்தில் அடுத்த ஆண்டிற்கான (2018-19) செறிவு சார் கடன் திட்ட மதிப்பீடு ரூ.2501 கோடி, கடன் திட்ட அறிக்கையினை மாவட்ட வருவாய் அலுவலர் திரு.சே.தனசேகரன் அவர்கள் வெளியிட்டார்கள்.**

அரியலூர் மாவட்டத்தில் அடுத்த ஆண்டு (2018-19) ரூ.2501 கோடி முன்னுரிமை வங்கி கடன்களாக வழங்க வாய்ப்புகள் இருப்பதாக நபார்டின் செறிவு சார் கடன் திட்ட அறிக்கையை (Potential Linked Credit Plan) இன்று வங்கிகளுக்கான ஆலோசனைக் கூட்டத்தில் இத்திட்ட மதிப்பீட்டை **மாவட்ட வருவாய் அலுவலர் திரு.சே.தனசேகரன் அவர்கள்** வெளியிட்டார்.

அரியலூர் மாவட்டத்தில் தற்போது உள்ள அடிப்படை கட்டமைப்பு வசதிகள் விரிவாக்க சேவை மையங்களின் செயல்பாடு பெருகி வரும் தொழில் நுட்ப பரிமாற்றம், வங்கிகளின் நிதி ஆதாரம் ஆகியவற்றை ஆதாரமாக கொண்டு ஒவ்வொரு ஆண்டும் நபார்டு செறிவு சாரா் கடன் திட்ட அறிக்கையை ஒரு புத்தகமாக வெளியிடுகிறது. அடுத்த ஆண்டு பயிர் கடன்களுக்கு ரூ.577 கோடியும், பண்ணைசாரா தொழில்களுக்கு ரூ.127 கோடியும் இதர முன்னுரிமை கடன்களுக்கு ரூ.297 கோடியும் வாய்ப்புகள் இருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இத்திட்ட அறிக்கை மாவட்டத்தின் வளமையை மட்டுமே முன் நிறுத்தி தயாரிக்கப்படுகிறது. எனவே, இம்மாவட்டத்தில் உள்ள எல்லா வங்கிகளுக்கும் இத்திட்ட அறிக்கையை பின் புலமாக கொண்டு அடுத்த ஆண்டுக்கான அவர்களது கடன் திட்டங்களை தயாரிக்கும் மாவட்டத்தின் முன்னோடி வங்கியான பாரத ஸ்டேட் பாங்க் அந்த திட்டங்களை ஒழுங்கு முறைப்படுத்தி மாவட்ட கடன் திட்டமாக பின்னர் வெளியிடப்படும்.

இதுபோன்று ஒவ்வொரு மாவட்டத்திலும் செறிவு சார் கடன் திட்ட அறிக்கைகளை தயாரித்து அலைகளை ஒன்றினைத்து மாநில திட்டமாக்கி மாநில அரசு மற்றும் மாநில அலை உயர் வங்கி அதிகாரிகளோடு ஆலோசனை கூட்டம் ஒன்றை நபார்டு நடத்துவதால் வங்கி கடன்கள் அதிகரிப்புக்கு தடையாக இருக்கும் இடர்பாடுகள் விரிவாக விவாதிக்கப்பட்டு தக்க நடவடிக்கைகள் எடுப்பதற்கு ஏதுவாக இத்திட்ட அறிக்கைகள் அமையும்.

மேலும், சொட்டுநீர் பாசனம், தரிசு நில மேம்பாட்டு, பழபயிர், பண்ணைகள், மீன் வளர்ப்பு, ஊரக கிடங்குகள், கூட்டு பொறுப்புக்குழுக்கள் அமைத்தல் போன்ற கடன் திட்டங்களுக்கு அதிக முன்னுரிமை கொடுக்க வேண்டுமென்று வங்கி அதிகாரிகளுக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது என **மாவட்ட வருவாய் அலுவலர் திரு.சே.தனசேகரன் அவர்கள்** தெரிவித்துள்ளார்கள்.

இக்கூட்டத்தில் நபார்டு வங்கி மாவட்ட வளர்ச்சி மேலாளர் எல்.எஸ்.நவீன்குமார், மாவட்ட முன்னோடி வங்கி மேலாளர் இளஞ்சேரன், ரிசர்வ் வங்கி முன்னோடி வங்கி மேலாளர் எஸ்.தியாகராஜன், மண்டல இணை இயக்குநர் (கால்நடை பராமரிப்புத்துறை) எம்.நஸீர் மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

செய்தி வெளியீடு:- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், அரியலூர்.